අධිකරණ, රාජ්‍ය පරිපාලන,ස්වදේශ කටයුතු,පළාත් සභා,පළාත් පාලන සහ කම්කරු අමාත්‍යාංශය
நீதி, பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சு
Ministry of Justice, Public Administration, Home Affairs, Provincial Councils, Local Government and Labour

රාජ්‍ය පරිපාලන අංශය (ඒකාබද්ධ සේවා) பொது நிருவாகப் பிரிவு (இணைந்த சேவைகள்) **Public Administration Division** (Combined Services)
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| දුරකතනය<br>தொலைபேசி: **011- 2696211**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்: **011- 2695279**<br>Fax | ඊ- මේල්<br>மின்னஞ்சல்: **info@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணைத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/DOS/Policy/පොදු | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2024.10.02 |

அமைச்சின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**<u>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தல்/ பதவி உயர்த்தல் தொடர்பான கருமங்களை விரைவில் முடிவுறுத்தல்</u>.**

அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தல்/ பதவி உயர்த்தல் தொடர்பான கருமங்கள் கீழ்வரும் காரணங்களினால் தாமதமடைவதாக என்னால் அவதானிக்கப்பட்டுள்ளது.

I. நிறுவன பிரதானிகளின் ஊடாக உத்தியோகத்தர்களின் பட்டம் பற்றிய விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தாமதம் நிலவுதல்.

II. சேவையில் உறுதிப்படுத்தும் போது மற்றும் உயர்த்தும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் மற்றும் மாதிரிகளை முறையான முன்வைக்காமை.

- 2020.01.01 தினத்திற்கு முன்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமித்த உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்துவதற்காக எனது இலக்கம் CS/DOS/Policy/පොදු/01 மற்றும் 2022.06.29 தினத்திலான ஆலோசனைகளின்படி அங்கு குறிப்பிடப்படும் CS/DOS/Con/Recom/2022 மாதிரியின் ஊடாக உரிய ஆவணங்கள் முன்வைத்தல் வேண்டும்.
- 2020.01.01 தினம் மற்றும் அதற்கு பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தலுக்காக PA/CS/POLICY/Guidelines மற்றும் 2020.08.24 தினத்தன்றான கடிதத்தின் ஆலோசனைப்படி CSC-I மற்றும் CSC-II மாதிரி மறறும் அதற்குரிய ஏனைய ஆவணங்களை முன்வைத்தல் வேண்டும்.

- 2013 வருடத்தில் அல்லது அதற்கு பின்னர் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் பொதுவான

செயலாற்றுகையின் மீது தரம் IIக்கு உயர்த்தல் தொடர்பில் எனது இலக்கம் CS/DOS/Policy/ பொது மற்றும் 2023.05.12 தினத்தன்றான கடிதத்தின் ஆலோசனையின்படி அங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்குரிய ஆவணங்களை முன்வைக்க வேண்டும்.

- அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் தரப்படுத்தல் தொடர்பிலான உயர்த்துதல் தொடர்பில் எனது இலக்கம் CS/DOS/ உள்ளீர்ப்பு மற்றும் 2020.07.20 தினத்தன்றான கடிதத்தின் ஆலோசனையின்படி அங்கு குறிப்பிடப்பட்டள்ள CS/DOS/PRO/APP விண்ணப்பத்தின் ஊடாக உரிய ஆவணங்களை முன்வைத்தல் வேண்டும். (இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்கள் மற்றும் இணைப்புக்கள் அனைத்தும் இவ் அமைச்சின் இணையத்தளத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குரிய இணையப்பகுதியில் விசேட அறிவித்தலின் கீழ் உள்ளன.)

III. நியமனத்தை உறுதிப்படுத்த/ பதவி உயர்த்துவதற்கு முன்வைக்கப்படும் ஆவணங்களின்படி தேவையான ஆவணங்கள்/ தகவல்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள போதும், அவ்ஆவணங்கள்/ தகவல்கள் இணைந்த சேவைகள் ஆணையாளர் நாயகத்திடம் அனுப்புவதற்கு அதிக காலம் செல்லுதல். (அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் நிறுவன கருமங்களுக்கு தேவையான ஆவணங்கள்/ தகவல்கள் இவ் அமைச்சின் இணையத்தளத்தில் அறிவித்தல்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்குரிய தொடர்பு https://www.pubad.gov.lk/web/images/contents/cs-services/dos/dos-deficiencies-in-the-doc-submitted-for-confirmation-promotion-other-organizational-matters.pdf ஆகும்.)

IV. நியமனம் பெற்ற பின்பு பெயர் மாற்றம் செய்யும் போது சமர்பிக்க வேண்டிய ஆவணங்கள் (திருத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ், சத்தியக்கடதாசி, உரிய திறைசேரியின் 394 ஆம் பிரகடனம்) காலம் தாழ்த்தி சமர்ப்பிக்கப்படல்.

02. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 02/2023இன் படி ஏதேனும் உத்தியோகத்தருக்கு தற்போதுள்ள தரத்திற்கு மேலான தரத்திற்கு வினைத் திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு தோற்ற முடியாததுடன் மேற்குறிப்பிடப்படும் காரணங்களின் மீது உத்தியோகத்தர்களின் சேவையினை நிரந்தரமாக்குதல்/ பதவி உயர்வு தாமதமாவதினால் உத்தியோகத்தர்களுக்கு சரியான சந்தர்ப்பத்தில் வினைத் திறன் தடை தாண்டல் பரீட்சைக்கு தோற்ற முடியாமை மற்றும் வேறு பிரச்சினைகள் பலவற்றிற்கும் முகம் கொடுக்க நேர்ந்துள்ளதென சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது.

03. அதனால் உத்தியோகத்தர்களின் சேவையினை நிரந்தரமாக்குதல்/ பதவி உயர்த்துவதற்கு உரிய ஆவணங்களை, உரிய முறையில் முன்வைத்தல், உரிய பொறுப்பதிகாரியினதும் மற்றும் அவ் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு பொறுப்பான நிர்வாக உத்தியோகத்தர்களினதும் பொறுப்பென இதனால் அடையாளப்படுத்தப்படுவதோடு, அவ்வாறு ஆவணங்களை

முன்வைக்காமையினால் ஏதேனும் உத்தியோகத்தருக்கு பாதிப்பு ஏற்படின், அது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு பொறுப்பாக்கப்படும் என தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்